இத்தனை முட்டாளா!'' என்று கேட்டான் அன்போடு சுந்தரமூர்த்தி.

# நல்ல காலம்

**வீட்டு** வாடகை, பால்காரன், மற்றச் செலவுகள் என்று ஒன்றும் விடாது கணக்குச் செய்து கூட்டிப் பார்த்த சீதாவின் இதழ்க்கடையில் லேசாகப் புன்னகை அரும்பியது. மாதம் முடிவடைவதற்கு இரண்டு தினங்கள் இருந்தும் சம்பளத்தில் நாற்பது ரூபாய் அப்படியே மீதமாகிவிட்டதைக் கண்டாள். ''குடும்பத்தில் ஏற்படும் அநாவசியச் செலவை அவ்வப்போது தடுத்துச் சிக்கனம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன என்பது இப்பொழுதல்லவா புரிகிறது?'' என்று சொல்லிக்கொண்ட அவள் தனக்குள்ளே கணக்குப் போட ஆரம்பித்தாள். இரண்டு தினங்களுக்குச் செலவிற்காகப் பத்து ரூபாய்களை எடுத்து வைத்துவிட்டால் முப்பது ரூபாய் மீதம். எல்லா வருடமும்போல் கிராமத்திலிருக்கும் பாட்டி தன் மாம்பழத் தோட்டத்துக் குத்தகைப் பணத்திலிருந்து பேத்திக்கென்று நூறு ரூபாய் அனுப்புவாள். அந்தப் பணமும் இன்னும் சில தினங்களில் வந்துவிடும். 'பெட்டிக்குள்ளே மூன்று மாத காலமாகக் கிடக்கும் அறுந்த சங்கிலிக்கு இந்தப் பணத்தின் மூலமாகவாவது நல்ல காலம் பிறக்கட்டும்' எனச் சிந்தித்துக்கொண்டிருந்தாள் சீதா.

அன்று ஆபீஸிலிருந்து வரும்பொழுதே கல்யாணராமன் மிகவும் களைப்பாகத் தென்பட்டான். சுடச் சுடக் காபியை தயாரித்து எடுத்துக்கொண்டு வந்தபோதுதான் சீதா வாசற்புறத்து வராந்தாவைக் கவனித்தாள். அங்கே வழக்கமாக நிற்கும் மோட்டார் சைக்கிளைக் காணவில்லை!

''ஆமாம்! சைக்கிள் எங்கே?'' என்று மிகவும் ஆச்சரி



யத்துடன் கேட்டாள் சீதா.

''காலையிலே புறப்படும்போதே ரொம்ப இடக்கு செய்ததல்லவா? அதை ரிப்பேர் செய்வதற்குக் கொடுத்திருக்கிறேன்'' என்று கூறிய கல்யாணராமன் அவள் முகத்தைப் பார்க்க மிகவும் அஞ்சியவன்போல் காபிப் பாத்திரத்தைக் கையில் வாங்கிக்கொண்டான்.

''எத்தனை நாள் இந்த ஓட்டை சைக்கிளை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறது? ரிப்பேருக்குச் செலவழிக்கும் பணமெல்லாம் தண்டம். பழைய சைக்கிள் வாங்கவேண்டாம் என்று அப்பொழுதே சொன்னேன்!'' என்று அலுத்துக்கொண்ட சீதா உள்ளே போகத் திரும்பினாள்.

''ஆமாம்! எனக்கு மட்டும் தெரியாதா? புதிதாக வாங்குவதற்கு அவ்வளவு பணம் எங்கே நம்மிடம் இருந்தது? ஆனால் இந்தத் தடவை ரிப்பேர் செய்துவிட்டால் அது இனிமேல் 'மக்கார்' பண்ணாது என்று நினைக்கிறேன். சில புதிய சாமான்களை மட்டும் போட்டுவிட்டால் நன்றாகிவிடும் என்று கடைக்காரனும் சொன்னான். ஒரு முப்பது ரூபாயோடு ஒழியட்டும் என்று வந்துவிட்டேன்.''

''முப்பது ரூபாயா!'' என்று கேட்ட சீதா திடுக்கிட்டு அப்படியே நின்றுவிட்டாள்.

முப்பது ரூபாயை மீதம் பிடிக்க அவள் செய்த தியாகங்கள் எத்தனை! ஒரு மாத காலமாக டிராமா சினிமா ஒன்றையும் அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இரவு வேளையில் சாப்பிட வழக்கமாக வாங்கும் பாலில் தன் பாகத்தைச் சிக்கனத்தின் நிமித்தம் குறைத்துக்கொண்டாள். குழந்தைகளுக்கு அநாவசியமாகத் துணிமணிகள் வாங்காது பணத்தை மிச்சப்படுத்தினாள். ஆபீஸில் கணவர் பகல்வேளைக்கு டிபன் சாப்பிட்டுச் செலவழிக்கும் பணத்தையும் மிச்சப்படுத்த வேண்டுமென்று வீட்டிலேயே டிபனையும் தயார் செய்தாள். அதிகமாக வேலையைத் தன் மேல் சுமத்திக்கொண்டு, வயிற்றை ஒடுக்கி சந்தோஷங்

களைக் குறைத்துக்கொண்டு மீதம் பிடித்து என்ன லாபம்? ஒன்றுமில்லை! நான்கு வருடங்களாக மண வாழ்க்கையில் அவளைத் துன்புறுத்தியது ஒரே ஒரு பிரச்னைதான். அதுதான் பணம். தாராளமாகச் செலவு செய்தோம், இல்லாமை என்பது இன்றி வாழ்ந்தோம் என்று இல்லாமல் பலவிதமாகக் கலங்கியே தன் நாட்களைப் போக்கி வந்தாள். இந்தப் பணப் பிரச்னை தீர்ந்து நல்ல காலம் என்பதைக் காணும் அறிகுறி சீதாவுக்குத் தென்படவே இல்லை. பலவாறு எண்ணி வருந்திய சீதா கண்ணினின்று வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு காரியங்களைக் கவனித்தாள்.

கைக்குழந்தையைத் தூங்கச் செய்துவிட்டு, மூத்த பெண் குழந்தைக்குச் சாதம் ஊட்டி விளையாடும்படி ஹாலுக்குள் அனுப்பிவிட்டு, கணவனைச் சாப்பிட அழைத்தாள் சீதா. கல்யாணராமன் யோசனையில் மூழ்கியவனாகத் தென்பட்டான். பதிலே பேசாது மௌனமாக இலை முன்னால் வந்து உட்கார்ந்துகொண்டான். அவசரமாக அவன் சாப்பிட்டு எழுந்ததும், கைகழுவ நீர் எடுத்து வர முற்றத்துக் குழாய்க்குப் போகத் திரும்பிய சீதா தடால் என்ற சத்தத்தைத் தொடர்ந்து குழந்தை ராஜி ஹோவென்று அலறுவதைக் கேட்டுத் திகைத்துப் போய் அப்படியே ஹாலுக்குள் விரைந்தாள். மேஜைமீது வைத்திருந்த அலாரம் கடிகாரத்தை முக்காலிமீது ஏறி எட்டி எடுக்க முயன்ற ராஜி, கடிகாரத்தைக் கீழே தள்ளிவிட்டு, நடுங்கிப்போய் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள்.

குழந்தையை வாரி எடுத்துக்கொண்ட சீதா பயத்துடன் அழுத அவளைச் சமாதானப்படுத்தினாள். அதைக் கவனித்த கல்யாணராமனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ''சிறிது நேரம் சும்மா இருந்தால் என்ன?'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு பளீரென்று குழந்தையின் முதுகில் ஓர் அறை வைத்தான்.

''குழந்தைக்கு என்ன தெரியும்? அதை அடிப்பதில்



என்ன பிரயோசனம்?'' என்று தடுத்த சீதாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ''ஒரு சிறு செலவைக் கண்டாலும் நடுங்கும் இல்லாமைக் கொடுமைதானே குழந்தையை இப்படி அடிக்கச் சொல்கிறது?'' என்று தொடர்ந்து கூறி முடிப்பதற்குள் அவள் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது.

கல்யாணராமன் ஸ்தம்பித்துப் போனான். சீதா தன் அதிருப்தியை வாய்விட்டுச் சொல்லிக் கண்ணீர் உகுத்தது அவனது வாழ்க்கையில் இதுதான் முதல் தடவை. விக்கி அழுதுகொண்டே குழந்தை சீதாவின் மடியில் சோர்ந்து தூங்கிவிட்டது. சிலையைப் போல் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த கல்யாணராமன் மனைவியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மெல்லிய குரலில், ''ஆமாம், சீதா! இந்த இல்லாமைதானே நமது வாழ்வின் சந்தோஷத்தையே நாசமாக்குகிறது? என்னை மணக்காமல் நீ உன் அத்தானை மணந்துகொண்டிருந்தால் இப்பொழுது எத்தனை சௌக்கியமாக இருந்திருப்பாய்!'' எனப் பெருமூச்செறிந்தான்.

''போதுமே! என்ன அசட்டுப் பேச்சு இது?'' என்று சீதா எழுந்திருந்தாள். அன்று சீதாவிற்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. பெயருக்குச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கை மீது சாய்ந்தாள். ஆனால் தூக்கம் வர மறுத்தது. காலையில் வந்த தினசரிப் பத்திரிகையைப் பிரித்துப் பக்கங்களைப் புரட்டினாள். ''கலையுலகின் அற்புதம்! டைரக்டர் சுந்தரம் அவர்களின் 'மாய சுந்தரி' வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்!'' என்ற விளம்பரத்தைப் பார்த்தாள்.

''என்ன! உங்க அத்தான் வருஷத்திற்கு இரண்டு படங்கள் என எடுத்து குவிக்கிறாரே? கெட்டிக்காரர் தான். பிழைக்கும் வழி தெரிந்தவர்'' என்றான் கல்யாணராமன் பரிகாசம் கலந்த குரலில்.

"அவரவர்கள் அதிருஷ்டம்" என்று வெறுப்புடன் கூறிய சீதா பத்திரிகையை மடித்துத் தூர எறிந்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு தூங்க முயன்றாள்.

சீதாவையும் அவள் தமையன் கோபுவையும் தவிர வேறு குழந்தைகள் கிடையாது கனகத்திற்கு. சிறு வயதிலேயே விதவையாகி விட்டதனால் தன் இரு குழந்தைகளையும் இரு கண்களைப்போல் வளர்த்தாள் சீதாவின் தாயார். கோபு கலாசாலையில் படிக்கையில்தான் கல்யாணராமனைச் சந்திக்க நேர்ந்தது. படிப்பிலே மிகவும் கெட்டிக்காரனான கல்யாணராமன், பிற்காலத்தில் மிகவும் மேதையாக விளங்குவான் என்ற ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான் கோபு. இலக்கியத்தின் மீது அவன் காட்டிய ஆர்வத்தைக் கண்ட அவனது சிநேகிதர்கள் எல்லாரும், அவன் பிற்காலத்தில் ஒரு பிரபல கதாசிரியனாகவோ, பத்திரிகாசிரியனாகவோ விளங்குவான் என்று எதிர்பார்த்தார்கள். சீதாவை, அவளுடைய அத்தை பிள்ளை கங்காதரனுக்குத்தான் கொடுப்பதென்று முதலில் அவள் தாய் கனகம் தீர்மானித்திருந்தாள். பையன் பார்ப்பதற்குச் சுமாராக இருந்தாலும், ஏதோ பூஸ்திதி இருக்கிறது, பெண் சௌக்கியமாக இருப்பாள் என்பது அவளுடைய அவா. ஆனால் வகுப்புக்கு இரண்டு வருஷங்கள் வீதம் வேகமாகத் தாண்டி வந்த மண்டு அத்தானுக்குத் தன் தங்கையைக் கல்யாணம் செய்து கொடுக்க, கோபு கொஞ்சங்கூட விரும்பவில்லை.

சீதாவைப் பொறுத்த வரையில் இன்டர்மீடியட் மாணவி என்றாலும் உலக அனுபவமே தெரியாத பச்சைக் குழந்தையாக இருந்தாள். சுருண்ட கிராப்புத் தலையும், கம்பீரமான உருவமும் கொண்ட கல்யாணராமனின் அழகான உருவத்தைக் கண்டு மயங்கினாள். அண்ணன் அவனது புத்திசாலித்தனத்தைப் புகழ்வதைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்தாள். "அவனை மணந்து கொள்கிறாயா?"



என்று சகோதரன் கேட்ட பொழுது மிகவும் சந்தோஷத்துடன் சம்மதித்தாள். தனக்கு நிச்சயித்திருந்த சீதாவைக் கல்யாணராமனுக்கு மணம் முடித்துக் கொடுத்தபோது அத்தான் கங்காதரனுக்குச் சில நாட்கள் உலகமே இருண்டு விட்டதைப் போல் தோன்றியது. பம்பாய்க்கு ஏதோ படிக்கப் போவதாகச் சொல்லி ஊரை விட்டே கிளம்பி விட்டான் அவன். சிலகாலம் அவனைப்பற்றி ஒன்றுமே தெரியாமலிருந்தது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு அவன் ஊருக்குத் திரும்பி வந்தபோது கிராமத்தில் அவர்கள் தெருவில் இருந்த கோடிவீட்டுப் பாகீரதியை அவன் மணந்து கொண்டான் என்று கேள்விப்பட்டாள் சீதா. பாகீரதி தாயும் தந்தையுமற்ற அநாதைப் பெண்; சீதாவின் பால்ய சிநேகிதி. பார்ப்பதற்கு அவ்வளவு அழகியல்ல. ஏதோ, அவளுக்கும் ஒரு நல்ல காலம் பிறந்ததே என்று அவளுக்காகச் சீதா ஆறுதல் அடைந்தாள்.

வாழ்க்கையின் ஆரம்பத்தில் கல்யாணராமன் எழுதுவதையே தன்தொழிலாக மேற்கொள்ளுவதென்று நகரத்தில் வந்து குடியேறினான். 'சூரிய ஒளி' என்ற ஒரு பத்திரிகையில் ஆசிரியர் பதவி வகித்துவிடுவது என்பதுதான் அவனது வாழ்க்கையின் லட்சியம். ஆனால் சில மாதங்களில் எழுதும் தொழில் அத்தனை உபயோகமானதென்று அவனுக்குத் தோன்றவில்லை. எழுதுவதையே தொழிலாக மேற்கொள்வதைவிட, ஏதோ கம்பெனி ஒன்றில் வேலை செய்துகொண்டு, பொழுதுபோக்காக எழுதிப் பிராபல்யம் அடையவேண்டுமென்று விரும்பினான். நான்கு வருஷ வாழ்க்கையில் அவனது மனோரதம் ஈடேறவில்லை என்பதைச் சீதா அறிவாள். காலையில் எழுந்தால் ஆபீஸும், வீட்டுத் தொல்லையும்; சாயங்காலம் வீட்டிற்கு வந்தால் குடும்பக் கவலையும், பணக் கவலையும். இந்த அழகில் அவன் கற்பனைக்கு எங்கே இருப்பிடம்? வாழ்க்கை சாரமற்றதாகக் காணப்பட்டது.

பலவாறு எண்ணி மனம் நொந்த சீதா அன்றிரவைத் தூக்கமின்றிக் கழித்தாள்.

மறுநாள் காலை ஆபீஸிற்குப் போகுமுன் தனக்கு வந்த தபால்களைப் படித்துக்கொண்டிருந்தான் கல்யாண ராமன். "'சூரிய ஒளி' பத்திரிகைக்கு வருஷ சந்தா அனுப்ப வேண்டுமாம். ஞாபகப்படுத்திக் கடிதம் வந்தி ருக்கிறது. இனி அந்தப் பத்திரிகையை நிறுத்திவிடப் போகிறேன். வீண் செலவு'' என்றான் சலிப்புடன்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? அந்தப் பத்திரிகை நமக்கு மிகவும் முக்கியம் அல்லவா? தற்கால எழுத்தாளர் களின் மனப்போக்கு தெரிவதற்கு அதைப் போன்ற பிரபல பத்திரிகையை நாம் படித்துக்கொண் டிருக்க வேண்டாமா? அதெல்லாம் ஒரு வீண் செலவல்ல. இந்த வருஷமும் கட்டிவிடுங்கள்'' என்றாள் சீதா.

''நான்கு வருஷங்களும் முயற்சி செய்தாகி விட்டது. இனியா நான் பிரபல எழுத்தாளனாகப் போகிறேன்?'' என மனக்குறையுடன் கூறிவிட்டுக் கல்யாணராமன் ஆபீஸுக்குப் புறப்பட்டான்.

அன்று நேரே ஆபீஸிற்குப் போவதற்குப் பதில் 'சூரிய ஒளி' ஆபீஸுக்குச் சென்றான்.

''என்ன வேண்டும்?'' என்று விசாரித்தார் முதலாளி தம் வழக்கமான சிரித்த முகத்துடன்.

''நான் கேட்டது ஞாபகம் இருக்கலாம்'' என்று கல்யாணராமன் ஆரம்பித்தான்.

''அதுதான் சொல்லிவிட்டேனே, மிஸ்டர் கல்யாணம்! தற்போது இங்கே இடம் இல்லை. மேலும் நீங்கள் கையி லிருக்கும் வேலையை விட்டுவிட்டு இங்கே வருவதில் அர்த் தமே இல்லை; நீங்கள் எதிர்பார்க்குமளவு சம்பளத்தில் இங்கே எடுத்துக் கொள்ள எங்களால் முடியாது. நான் சொல்கிறபடி செய்யுங்கள். ஏதோ நாவல் எழுதிக்கொண் டிருக்கிறேன் என்றீர்களே, அதை வேண்டுமானால் இந்த



வருஷம் எங்கள் பரிசுப்போட்டிக்கு அனுப்புங்கள். வெற்றி கிடைத்தால் பணமும் பிரபலமும் அடையலாம்'' என்றார் கண்டிப்பாக.

கல்யாணராமன் மனச் சோர்வுடன் அங்கிருந்து கிளம்பி ஆபீஸுக்குச் சென்றான். அவனுடன் படித்த 'குமுதா' மில்லின் முதலாளி மகன் சின்னப்பா ஒரு கடிதம் எழுதியிருந்தான்:—

''என்னுடைய வியாபார விஷயமாகப் படிப்பதற்கு அமெரிக்கா முதலிய மேல் நாடுகளில் சுற்றுவதாகத் தீர்மானித்திருக்கிறேன். என் சொந்த அலுவல்களைக் கவனித்துக்கொள்ள ஓர் அந்தரங்கக் காரியதரிசி தேவை. நீதான் அதற்குத் தகுந்தவன் என்று உன்னைத் தேர்ந் தெடுத்திருக்கிறேன். என்னுடன் வருவதற்கு உனக்குச் சம்மதமா? உடனே பதில் எழுது.''

கடிதத்தைப் படித்தவுடனே கல்யாணராமனின் மனம் குதூகலத்தால் பொங்கியது. ஆனால், மூன்று வருஷங்கள் என்றதும் அவன் மனம் பின்னிட்டது. மூன்று வருஷங்கள் தன் அருமை மனைவியையும், பிரிய மான குழந்தைகளையும் பிரிந்திருப்பது அவனால் சாத்திய மான காரியமா?

''என் குடும்பத்தைத் தனியே விட்டு, நான் உன்னுடன் வருவது இயலாது. மன்னிக்கவும்'' என்று ஒரு கடிதத்தை எழுதித் தபாலில் அனுப்பினான்.

வீட்டில் சீதா மிகவும் ஆவலுடன் தனக்கு வந்த தபாலைத் திறந்தாள். ''இந்த வருஷம் ரிஷி பஞ்சமி விர தத்தை முடிக்கவேண்டி யிருப்பதால், வழக்கமாக அனுப் பும் நூறு ரூபாயை அனுப்ப முடியவில்லை'' என்ற பாட்டி யின் கடிதத்தைப் படித்தாள். ஏமாற்றத்தினால், பெரு மூச்செறிந்த அவள், நல்ல காலமாவது நல்ல காலம்!'' என்று விரக்தியுடன் கூறிக் கொண்டாள்.

வாயிற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது.

கதவைத் திறந்த அவள்முன்பு எதிர்பாராத விருந்தினர்கள் இருவர் உள்ளே நுழைந்தனர். டைரக்டர் கங்காதரம் தம் மனைவி பாகீரதியோடு எழுந்தருளியிருந்தார். தங்கள் வீட்டு இல்லாமைக் குறையை அத்தான் அறிந்து கொள் வதைச் சீதா விரும்பவில்லை. ஸைக்கிள் ரிப்பேருக்காக எடுத்து வைத்திருந்த முப்பது ரூபாயில் பதினைந்து ரூபாயை எடுத்துக்கொடுத்து விருந்து தயாரிக்கச் சாமான் களை வாங்க வேலைக்காரியை உடனே அனுப்பினாள்.

அநாதை பாகீரதி இப்போது அநாதையாக இல்லை. அவளிடம் ஏற்பட்டிருந்த மாறுதலைச் சீதா கவனிக்கத் தான் செய்தாள். பட உலகத்தைப் பற்றிய சகலமும் தெரிந்துவிட்டவள் போல் பாகீரதி பேசினாள். விருந்தினர் கள் மூன்று நாட்கள் அங்கே தங்கினார்கள். சீதா அந்த மூன்று நாட்களும் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து கொண்டாள்.

பாகீரதி ஊருக்குச் சென்று இரண்டு தினங்கள் சென் றன. விருந்தினர்களை உபசரித்ததிலும், மோட்டார் ஸைக்கிள் ரிப்பேராகி வந்ததிலும் ஏற்பட்ட செலவைச் சீதா கணக்கிட்டாள். தொண்ணூறு ரூபாய் செலவு அதிகப்படியாகி யிருந்தது. கணவன் பணத்தைப் பற்றிக் கலங்குவதைக் கண்ட சீதாவிற்கு ஒரு யோசனைதான் தோன்றியது. பெட்டியிலே கிடக்கும் சங்கிலியை எடுத்து விற்றாலொழிய வேறு வழி இல்லை என்று சங்கிலியைக் கொணர்ந்து கணவனிடம் கொடுத்தாள்.

அவன் வெளியே சென்றதும் சீதா உட்கார்ந்து யோசிக்கலானாள். பாகீரதியைப் போல வைரமும் வைடூரிய மும் சுக வாழ்வும் அவள் விரும்பவில்லை. சாதாரணக் குடும்பச் செலவுகளைக் கண்டு நடுங்கித் திகிலடையாமல் இருக்கும் நிறைவைத்தான் அவள் வேண்டினாள். ஆனால் அந்த நல்ல காலம் வருவதாக அவளுக்குத் தோன்றவே இல்லை.



''தபால்!'' என்ற குரல் அவள் சிந்தனையைக் கலைத் தது. அவள் முன்பு வீசி எறியப்பட்ட கடிதத்தை அவசர மாகப் பிரித்துப் படித்தாள் சீதா. ''பட விஷயமாக என் கணவர் வட நாட்டில் மூன்று மாதகாலம் தங்க உத்தேசித்துக் கிளம்பிவிட்டார். ஆகவே, நான் தனியாக இந்த வருஷம் கோடைக் காலத்தைக் கொடைக்கானல் பங்களாவில் கழிக்க வேண்டியிருக்கிறது. நீ உன் குழந்தை களுடன் எனக்குத் துணையாக வந்து தங்கிப் போக வேண்டும். செலவுக்குக் கவலைப்படாதே!'' என்று பாகீரதி எழுதியிருந்தாள்.

சீதாவிற்குச் சற்று உற்சாக மேற்பட்டாலும் ஒரு பக்கம் கவலையும் ஏற்பட்டது. தானும் குழந்தைகளும் மூன்று மாதங்கள் வெளியே தங்கிவிட்டால் செலவு மீத மாகும். என்றாலும், கணவன் தனியாயிருப்பாரே என்ற வேதனை அவளை வாட்டியது.

ஆபீஸிலிருந்து திரும்பியதும் விஷயத்தைக் கேட்ட கல்யாணராமன், ''அப்படியானால் நீ போகத் தீர்மானித்து விட்டாயா?'' என்று கேட்டான் வருத்தத்துடன்.

ஒருகணம் தடுமாறிய சீதா சமாளித்துக் கொண்டவ ளாய், ''ஆமாம்! குழந்தைகளுக்கும் சந்தோஷமாய் இருக் கும். நமக்கும் செலவு மட்டுப்படும்'' என்றாள். ''சரி! அப்படிப்பட்ட பங்களாக்களுக்கு என்னால் உன்னை எங்கே அழைத்துப் போக முடியப் போகிறது! போய் வா'' என்று நிராசையுடன் கூறினான்.

மறுநாள் காலையிலிருந்தே பிரயாணத்திற்குவேண்டிய மூட்டை முடிச்சுகளைத் தயார் செய்ய ஆரம்பித்தாள் சீதா. பெட்டிச் சாவி ஒன்றைக் காணாதவளாய், கணவனின் மேஜையைத் தேடிய அவள் கண்களில் ஒரு கடிதம் தென்பட்டது.

''உன்னைப்போலக் குடும்பப் பித்துக்களை நான் கண்டதே இல்லை. அமெரிக்கா போன்ற நாடுகளைப்

பார்க்கும் சந்தர்ப்பங்களை நானாக உனக்கு வலியஅளித்து, பண உதவியும் செய்ய முன்வந்துங்கூட, நீ குடும்பத்தின் மீதுள்ள பற்றுதலால் வரமறுத்துவிட்டாய். அவ்வளவு தான் உன் அதிருஷ்டம். இப்படிக்கு, சின்னப்பா.''

கடிதத்தைப் படித்து முடித்த சீதாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. சின்னப்பாவுக்கும் தன் கணவனுக்கும் நடந்த கடிதத்தின் அர்த்தத்தை ஊகித்துக் கொண்டாள். ஓர் அரிய சந்தர்ப்பத்தை உதறித் தள்ளிய கல்யாணராமனின் அன்பை நினைத்த மாத்திரத்தில் அவளுக்குத் தன் சுயநலத்தின்மீது அருவருப்பு ஏற்பட்டது. ஒரே நொடியில் தன் பிரயாணத்தை ஒத்திப் போட்டு விட்டாள்.

ஆபீஸிலிருந்து அன்று சற்றுச் சீக்கிரமாகவே வந்த கல்யாணராமன், ''என்ன சீதா? தயாராகிவிட்டாயா?'' என்று கேட்டான்.

''இல்லை. நான் ஊருக்குப் போகப் போவதில்லை'' என்று கூறிய சீதா அவன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன்?'' என்று கேட்ட கணவனிடம், ''நீங்கள் ஏன் அமெரிக்காவுக்குப் போகவில்லை? அதே காரணந்தான்!'' என்று கூறி மெல்லச் சிரித்தாள் சீதா. கல்யாணராமன் பதில் பேசுமுன் 'போஸ்ட்' என்ற குரலைக் கேட்டு ஏக காலத்தில் இருவரும் திடுக்கிட்டனர்.

கடிதத்தைப் பிரித்த கல்யாணராமன் சந்தோஷக் கூச்சலிட்டான்.

''சீதா, நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது. இதோ பார்! நான் அனுப்பிய நாவலுக்கு 'சூரியஒளி'ப் பத்திரிகைப் போட்டியில் முதல் பரிசாக மூவாயிரம் ரூபாய் வருகிறதாம்'' என்று குதித்தான்.

''இதற்கு முன்னேயே நமக்கு நல்ல காலம் வந்து விட்டதே! என்ன கஷ்டம் வந்தாலும் குடும்பத்தை



விட்டுப் பிரியக்கூடாது என்று இருந்தோமே, அதுவே நமது நல்ல காலம் இல்லையா!'' என்று கூறிய சீதா புன்முறுவல் பூத்தாள்.

# கடந்த வருஷம்

பட்டாஸ் கடை எதிரில் வந்து நின்ற ஜகதீசன் தட்டுகளில் அடுக்கி வைத்திருந்த யானை வெடிகளைத் தயக்கத்துடன் பார்த்தான். ''இதோ பாருங்கள்! இந்த வருஷமும் வழக்கம்போல் யானை வெடிகள், பூனை வெடிகள் என்று வாங்கிக்கொண்டு வந்து கூத்தடித்தீர்களானால் எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். பட்டாஸ் வெடிச் சப்தம் கேட்டால் குழந்தை பயந்து கொண்டு அழுகிறான்'' என்று அவன் புறப்படு முன்பே சுசீலா போட்ட தடை உத்தரவு அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

''கம்பி மத்தாப்பு இரண்டு டஜன் கொடு. போதும்'' என்று தன்வியாபாரத்தைப் பட்டாஸ்கடையில் சட்டென்று முடித்துக்கொண்டு பஸ் ஸ்டாண்டை நோக்கிச் சென்றான். மத்தாப்பு ஒளியைக் கண்டதும் முன்னிரண்டு அரிசிப் பற்கள் தெரிய வாயைத் திறந்து சிரித்துக் கொண்டு, சுருண்ட குழல்கற்றை நெற்றிமீது வந்து புரள, தலையை அசைத்து உற்சாகத்துடன் ஆர்ப்பரிக்கப் போகும் தன் அருமை மைந்தனை நினைத்துக்கொண்டான். அந்தக் கற்பனை அவனது உள்ளத்தை உவகையினால் பூரிக்கச் செய்தது.

''இந்தாரும், உம்மைத்தானே!'' என்று யாரோ கூட்டத்தில் தோளைத் தட்டி உரத்துக் கூவி அழைப்பதைக் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான்.

''சௌக்கியமா? ஞாபகம் இருக்கிறதா?'' என்று வினவினார் எதிரே வந்து நின்ற அந்த வயோதிகர். அந்த